குழந்தைகள் – மாணவர்கள் – தாய்மார்கள் – முதியவர்கள் என்று அனைத்துத் தரப்பினருக்கும் தேடித் தேடி

# திட்டங்களை நிறைவேற்றுவதால் முதல்வரை தமிழ்நாடே கொண்டாடுகிறது!

## சட்டப் பேரவையில் – வி.சி. சந்திரகுமார் பேச்சு!

சென்னை, மார்ச் 20 -

குழந்தைகள், தாய்மார்கள், முதியவர்கள் என்று அனைத்துத் தரப்பினருக்கும் தேடி தேடித் திட்டங்களை நிறைவேற்றுவதால் முதல்வரை தமிழ்நாடே கொண்டாடுகிறது என்று சட்டப் பேரவையில் ஈரோடு தொகுதி உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் பேசுகையில் குறிப்பிட்டார்.

பேரவையில் ஈரோடு கிழக்கு தொகுதி உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் பேசியதாவது:-

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், தென்னாட்டு பெர்னாட்ஷா பேறறிஞர் அண்ணா, தமிழகத்தின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரை நினைவில் ஏந்தி, 'எத்தனை அம்புகள் எய்தாலும் நான் வீழ்வேன்' என்று நினைத்தாயோ என்று சொல்லி கம்பீரமாக அமர்ந்திருக்கும் பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் திராவிட இனத்தின் தலைவரே, திராவிடத்தின் நான்காம் தலைமுறையே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரே, திராவிட மாடல் அரசின் பேரரசரே, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தின் இளம் தலைவரே, திராவிடத்தின் ஐந்தாம் தலைமுறையே, தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட மாடல் அரசின் அமைச்சர் பெருமக்களே, மாண்பமை வாய்ந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் நான் போட்டியிடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி, 10 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அவையிலே வந்து அமர்வதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த கழகத்தின் இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எனது வெற்றிக்கு அரும்பாடுபட்ட தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்திற்கு 1,15,709 வாக்குகளை அளித்து, எதிர்த்து நின்ற 45 வேட்பாளர்களையும் deposit என்று சொல்லக்கூடிய வைப்புத் தொகையை இழக்கச் செய்து, தி.மு.க.-வின் உதயசூரியன் சின்னத்தை மாபெரும் வெற்றி பெறச் செய்த ஈரோடு கிழக்குத் தொகுதி மக்களுக்கு என்னுடைய மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். எனது வெற்றிக்கு உடனிருந்து தேர்தல் பணியாற்றிய அனைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகளுக்கும், முத்தமிழறிஞர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கும், இந்தியா கூட்டணிக் கட்சியினருக்கும், பல்வேறு சமுதாய அமைப்புகளுக்கும், தொழில் சார்ந்த அமைப்புகளுக்கும், நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



### பல்வேறு சிறப்பம்சங்கள்!

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களே, சூரியனின் ஒளியைப் பெற்றுத்தான் இரவு நேரத்தில் சந்திரன் பிரதிபலிக்கின்றது. அதேபோன்று, திராவிட மாடல் ஆட்சியின் சூரியனாக இருந்து எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் உதய சூரியனே, உங்களிடமிருந்து அதைப் பெற்று இந்த சந்திரன் ஈரோடு மக்களுக்காக என்றும் பிரதி பலிப்பேன் என்ற உறுதியை தங்களுக்கு இந்த நேரத்தில் அளித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டின் Budget என்றுதான் இதைப் பார்க்கிறோம், but இது jet ஆகத்தான் உள்ளது. ஆம்; தமிழ்நாட்டின் வளர்ச்சியை jet வேகத்தில் கொண்டு செல்லும் Budget என்று சொன்னால் அது மிகையாகாது.

2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் எனக்கு பேச வாய்ப்பு வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு சிறப்பம்சங்கள் உள்ளன. அதில் சிலவற்றை மாண்பு மிகுந்த இந்த அவையில் எடுத்துரைக்க விரும்புகின்றேன். எல்லார்க்கும் எல்லாம் கிடைத்திட வேண்டும் என்ற கொள்கையை முன்னிறுத்தும் நமது திராவிட மாடல் அரசு, ஆணுக்கிங்கே பெண் சரிநிகர் சமம் என்கிற சரிநிகர் சமத்துவப் பாதையில் பெண்களுக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கலைஞரின் உரிமைத் தொகைத் திட்டம்; இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/- வழங்குகின்ற இந்த உன்னதத் திட்டத்திற்கு 13,807 கோடி ரூபாயை இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறது. இந்த உன்னதமான திட்டத்தை இப்போது இந்தப் பேரவையிலிருந்து வெளியே சென்ற உறுப்பினர்கள் கொச்சைப்படுத்திப் பேசினார்கள். ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கின்றேன்; இந்தப் பேரவையில் பேசுகின்ற இந்த வார்த்தையை வெளியே சென்று இந்தத் தொகையை பெற்றுக் கொண்டிருக்கின்ற, வாங்கிக் கொண்டிருக்கின்ற மகளிரிடத்தில் பேச முடியுமா என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த உன்னதமான திட்டம், இன்றைக்கு எத்தனையோ ஏழை எளிய தாய்மார்களின் சேமிப்புக்கு உதவுகிறது; அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுகிறது; அவர்கள் அன்றாடம் செய்கின்ற மருத்துவ உதவிக்கும் உதவுகிறது.

அவர்கள் அன்றாடம் செய்கின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வாக இந்த கலைஞர் மகளிர் உரிமைத் தொகை இருக்கிறது என்பதை யாராலும் மறுக்கவும் முடியாது; மறைக்கவும் முடியாது. முதல்வர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றபோது, அங்கே இருந்த மக்களெல்லாம் எங்களிடத்தில் ஆர்வத்தோடு வந்து பேசினார்கள். இந்த திராவிட மாடல் அரசைப் பற்றி ஒரு வார்த்தைகூட குறை சொல்லி பேசவில்லை. ஆனால் அவர்கள் கேட்டுக்கொண்ட ஒரே ஒரு கோரிக்கை, நாங்களெல்லாம் அப்போது இந்த கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கு விண்ணப்பத்தை அளிக்காமல் விட்டுவிட்டோம். எப்படியாவது முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி, அந்த விண்ணப்பத்தை நாங்கள் மீண்டும் கொடுப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று சொன்னார்கள். கேட்டதும் கொடுப்பவனே கர்ணா, கர்ணா என்று சொல்வார்கள், ஆனால் இதனை கேட்காமலேயே கொடுத்திருக்கின்றார், நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இந்த கலைஞர் உரிமைத் தொகை பெறாத தகுதிப் பெற்ற பெண்களுக்கு இந்த முறை மீண்டும் விண்ணப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று சொல்லியிருக்கின்ற ஓர் அறிவிப்பை இந்த நிதிநிலை அறிக்கையில் கொடுத்திருக்கின்றார். அந்த வகையில் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

### உயரிய நோக்கம்!

அதேபோல், பெண்கள் கட்டணம் இல்லாமல் செல்கின்ற விடியல் பயணம். அந்த விடியல் பயணத்தில் இன்றைக்கு 40-லிருந்து 65 சதவிகிதம் பெண்கள். இன்றைக்கு கட்டணமில்லாமல் பேருந்தில் பயணிக்கின்றார்கள் என்றும், 50 இலட்சம் பெண்கள் தினசரி பயணிக்கின்றார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 858 ரூபாய் இதனால் சேமிக்கப்படுகின்றது என்ற அறிவிப்பை பார்க்கின்றபோது, மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஏனென்று சொன்னால், வேலைக்குச் செல்கின்ற தாய்மார்கள், வேலை நேரத்தில் அவசர அவசரமாக பேருந்துக்குச் சென்று ஏறுகின்றபோதுதான், அவர்கள் வீட்டிலேயே அதற்குரிய கட்டணத்தை வைத்துவிட்டு வந்து அங்கே தடுமாறுகின்ற நிலைகளையெல்லாம் நாம் நேரில் கண்டிருக்கிறோம். அதற்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைக்கின்ற விதமாக இங்கே அன்பிற்குரிய நம்முடைய இந்த திராவிட மாடல் அரசு, விடியல் பயணத்தின் மூலமாக 3,600 கோடி ரூபாயை ஒதுக்கி அந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயலாற்றுகின்ற வகையில் தமிழ்நாட்டிலிருக்கின்ற பணிக்கு செல்கின்ற பெண்கள் அனைவரும் இனி கட்டணம் இல்லாமல் செல்ல வேண்டுமென்ற ஓர் உயரிய நோக்கத்தோடு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. 4 ஆண்டுகளாகத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது என்பது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

அதேபோல், புதுமைப் பெண் திட்டம். இந்தப் புதுமைப் பெண் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், இந்தத் திட்டத்தை உருவாக்கின்றபோது, இந்தத் திட்டத்தை கொண்டு வருகின்றபோது, பலரும் பல்வேறு வகைகளில் விமர்சனம் செய்தார்கள். இப்போது பேசுகின்றபோதும்கூட வாக்குகளை வைத்து என்று சொல்கிறார்கள். நான் சொல்கின்றேன்; வாக்குகளுக்காக நடத்துகின்ற ஆட்சி இந்த திராவிட மாடல் ஆட்சி கிடையாது. வாக்குகளுக்காகச் செயல்படுகின்ற முதலமைச்சர் இங்கே இருக்கின்ற நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி இல்லை. ஏனென்று சொன்னால், காலை உணவுத் திட்டம் முதற்கொண்டு, ஒவ்வொரு திட்டங்களிலும், அதிலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் எப்படி பயன் பெறுகிறார்கள் என்பதை மட்டும்தான் அவருடைய நோக்கமாக இருக்கின்றதேயொழிய, வாக்கு என்பது அவருக்கு ஒரு நோக்கமாக இல்லை என்பதை முதலில் நாம் தெரிந்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு புதுமைப் பெண் திட்டத்திலே ஒவ்வொரு மாணவிக்கும் ஆயிரம் ரூபாயைக் கொடுக்கின்றபோது, உயர் கல்வியிலே சேர்கின்ற, உயர் கல்வியிலே இணைந்து படிக்கின்ற வாய்ப்பினை 19 சதவிகிதம் பெண்கள், பெண் குழந்தைகள் பெற்றிருக்கிறார்கள் என்கின்ற செய்தியை நிதிநிலை அறிக்கையில் பார்க்கின்றபோது மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இந்தப் புதுமைப் பெண் திட்டத்தைப் பற்றி முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு செய்தியை பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய ஈரோட்டிற்கு அரசினுடைய நிகழ்ச்சிக்காக வருகை தந்திருந்தார். வருகை தந்துவிட்டு, கோயம்புத்தூர் விமான நிலையத்தை நோக்கி சென்றபோது, ஈரோட்டில் அரசு உதவி பெறுகின்ற ஈரோடு அரசு கலைக் கல்லூரி இருந்தது. அந்தக் கல்லூரியிலிருந்து கிட்டத்தட்ட 500 மாணவிகள் அங்கே வழிநெடுக வெளியே நின்று, அவர்களுக்கு வரவேற்பு கொடுத்தார்கள். அந்த மாணவிகளை பார்த்தவுடன் முதலமைச்சர் அவர்கள் வாகனத்திலிருந்து இறங்கி, அவர்களிடத்திலே பேசிவிட்டு சென்றார்கள். அதன்பிறகு கடந்த வாரம் அந்தக் கல்லூரிக்கு ஒரு நிகழ்ச்சிக்காகச் சென்றபோது, அந்தக் கல்லூரியினுடைய முதல்வர் பேசுகிறார், எங்களுடைய கல்லூரியில் இருக்கின்ற 99 சதவிகித மாணவிகளும், மாணவர்களும் இந்தப் புதுமைப் பெண் திட்டத்திலும், தமிழ்ப் புதல்வன் திட்டத்திலும் பயன் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்கின்றபோது, அந்த மகிழ்ச்சி, எங்களுக்குக் கிடைத்த மகிழ்ச்சியல்ல; நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கின்ற இந்த மகத்தான சாதனைக்குக் கிடைத்த மகிழ்ச்சியாக, வெற்றியாக நாங்கள் பார்க்கின்றோம். இதையெல்லாம் புரியாதவர்கள்தான், இந்தத் திட்டத்தைப் பற்றியெல்லாம் குறை சொல்ல முடியும்.

### மகளிர் சுய உதவிக்குழுக்கள்!

அதோடு மட்டுமல்ல, மகளிர் சுய உதவிக் குழுக்களை எடுத்துக்கொண்டால், சுய உதவிக் குழுவின் பிறப்பிடமே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருந்தபோது, தருமபுரியில் உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழு இன்றைக்கு ஏற்கெனவே கிட்டத்தட்ட 4,76,000 சுய உதவிக் குழுக்கள் இருக்கின்ற நிலையில், மேலும் தேவைப்படுகின்றது என்பதை அறிந்து இன்றைக்கு 10,000 சுய உதவிக் குழுக்களை புதிதாக அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் அதற்கான உத்தரவுகளை கொடுத்திருக்கின்றார் என்று சொன்னால், இது சாதாரண விஷயமல்ல.

ஏனென்று சொன்னால், இந்த 4 இலட்சத்து 76 ஆயிரத்துடன் 10 ஆயிரம் சேரும்போது, 4 இலட்சத்து 86 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கும் 37 ஆயிரம் கோடி ரூபாயினை வங்கியில் கடனாக பெற்றுத் தருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறார் என்று சொன்னால், இங்கே சாதாரண ஏழையெளிய மக்கள் இனி தமிழ்நாட்டிலே பொருளாதாரத்திற்கு யாரையும் சார்ந்திருக்கக் கூடாது. இந்த திராவிட மாடல் அரசு இருக்கின்றவரையில், அவர்கள் அத்துணைப் பேர்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், கடமையும் எனக்கு இருக்கின்றது என்பதுடைய வெளிப்பாடுதான் இது.

அதோடு மட்டுமல்ல, தோழியர் விடுதி. இது யாருக்கும் தோன்றாத ஒரு சிந்தனையாக பார்க்கின்றோம். தோழியர் விடுதி ஈரோட்டிற்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 13 இடங்களிலே ஏற்கெனவே கிட்டத்தட்ட 1,303 பணிபுரியும் பெண்கள் அதிலே தங்கியிருக்கிறார்கள். இப்போது எங்களுடைய ஈரோடு உட்பட மேலும் 10 இடங்களிலே 800 பெண்கள் அங்கே தங்குவதற்கு ஏற்றார்போல 77 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார் என்று சொன்னால் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு உயர் கல்விக்கு 3,000 மாணவர்களுக்கு 275 கோடி ரூபாயில் மூன்று மாணவியர் விடுதி. அதாவது கிராமப்புறங்களிலிருந்து எங்களைப் போன்று வந்தவர்களுக்குத்தான் இதனுடைய அருமை தெரியும். நகர்ப்புறத்தில் பட்டும், பகட்டோடு சொகுசாக வாழ்பவர்களுக்கு தெரியாது. குக்கிராமங்களிலிருந்து பெரு நகரங்களை நோக்கி உயர் படிப்பிற்கு வருகின்ற மாணவிகளெல்லாம் மிகப் பெரிய அளவிலே பாதிக்கிறார்கள். ஏனென்று சொன்னால், இங்கே சென்று சாதாரணமாக ஒரு அறை எடுத்து தங்க வேண்டுமென்று சொன்னால், அந்த அறைக்கு வாடகை ரூபாய் பத்தாயிரம் கொடுக்க வேண்டும். சாப்பாட்டிற்கு பத்தாயிரம் ரூபாய். கிட்டத்தட்ட மாதத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் செலவு செய்தால் மட்டுமே, குக்கிராமத்திலிருந்து வருகின்ற (மணியடிக்கப்பெற்றது) ஏழையெளிய மாணவிகள் பெருநகரத்திலே படிக்க முடியும். அப்படிப்பட்ட நிலையை கருத்திலே கொண்டு, இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள், சென்னை, கோவை, மதுரை ஆகிய மூன்று மாநகரங்களிலும் தலா ஆயிரம் மாணவிகள் தங்கி படிக்கின்ற அளவிற்கு ஒரு மாணவியர் விடுதியை உருவாக்கியிருக்கின்றார் என்று சொன்னால், இப்படிப்பட்ட முதல்வரை எந்தக் காலத்திலும் தேடவும் முடியாது. இப்படிப்பட்ட முதல்வர், இன்றைக்கு கிடைத்திருக்கின்ற முதல்வரைப்போல நமக்கு கிடைப்பதற்கும் வாய்ப்பில்லை என்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### காலை உணவுத் திட்டம்!

அதேபோல காலை உணவுத் திட்டம். காலை உணவுத் திட்டத்தைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே காலை உணவுத் திட்டம், அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிப் பெறும் பள்ளிகளிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும், ஊராட்சிப் பகுதிகளிலும் நடைபெறுகிறது. ஆனால், நகராட்சிப் பகுதிகளிலே, நகர்ப்புறப் பகுதிகளிலே இருக்கின்ற பள்ளிகளிலே அது இல்லை என்று அறிந்தவுடனே, காலை உணவுத் திட்டம் அங்கு செயல்படுத்தப்படவில்லை என்று தெரிந்தவுடனே, கிட்டத்தட்ட 3.16 இலட்சம் குழந்தைகளுக்கு 600 கோடி ரூபாய் செலவிலே காலை உணவுத் திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறார் என்று சொன்னால், இப்படிப்பட்ட முதல்வரை எங்கே போய் நாம் தேட வேண்டும்? தேடுவது என்றுதான் கேள்வி எழுப்ப வேண்டியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல 500 குழந்தைகள் நல மையங்களுக்கு ரூபாய் 3,676 கோடியினை இன்றைக்கு குழந்தைகள் மேம்பாட்டிற்காக ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல, மூன்றாம் பாலினத்தவர் என்று சொல்லி எள்ளி நகையாடுகின்றவர்கள் மத்தியிலே, அந்த மூன்றாம் பாலினத்தவர்களை தேர்தல் காலங்கள், விழாக் காலங்கள், கூட்டம் நெரிசல் மிகுந்த இடங்கள், போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்களிலே அவர்களுக்கு ஊர்க் காவல் படையிலே இருப்பதை போன்ற சீருடைகளை, இன்னும் சொல்லபோனால் காவல் துறை போன்று ஒரு சீருடையை கொடுத்து, அவர்களையும் இங்கே ஒரு தனி மனித, சுய மரியாதையுடன் இருக்கக் கூடிய ஒரு நபராக மாற்றி, அவர்களை போக்குவரத்து நெரிசலுக்கும், மக்கள் பாதுகாப்பிற்கும் அவர்களை நாம் பயன்படுத்த வேண்டுமென்கின்ற ஒரு நோக்கத்தை இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஆண்கள், பெண்கள் மட்டுமல்ல, குழந்தைகள் மட்டுமல்ல, மாணவ, மாணவிகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்துணைப்பேருக்கும் முதல்வராக இருக்கின்றார் என்பதிலே மாற்றுக் கருத்து யாருக்கும் இருக்க மறுக்க முடியாது.

அதோடு மட்டுமல்ல, அன்புச் சோலை என்கிற ஒரு திட்டத்தை சொல்லியிருக்கிறார். 25 இடங்களிலே 10 கோடி ரூபாய் செலவிலே, இந்த அன்புச் சோலை திட்டத்தினை எங்களுடைய ஈரோட்டிற்கும் கொடுத்திருக்கிறார். உண்மையாகவே ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதம். முதியோர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமான திட்டம். ஏனென்று சொன்னால், பல்வேறு முதியோர்கள் இருக்கின்ற வீடுகளுக்கு நாம் சென்று பார்க்கின்றபோது, அங்கே அவர்கள் பேச்சு துணைக்குக்கூட யாருமில்லாமல், அங்கே விட்டேத்தி யாக, அங்கே இருக்கின்ற விட்டேத்தியாக பார்த்துக்கொண்டு மனம் நொடிந்து இருந்தார்கள். ஆனால், அவர்களையெல்லாம் மகிழ்விக்கின்ற வகையிலே அவர்களுக்கு தேவையான வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து, அண்ணன் தளபதி அவர்கள் இன்றைக்கு அன்புச் சோலை என்ற திட்டத்தை துவங்கியிருக்கிறார் என்று சொன்னால் நிச்சயமாக சொல்கின்றோம். (மணியடிக்கப் பெற்றது) இப்படிப்பட்ட ஒரு முதலமைச்சர் தமிழ்நாட்டிலே அண்ணன் தளபதி அவர்களை தவிர வேறு யாரும் இருக்க முடியாது. இப்படியெல்லாம் மகளிர்களுக்கு, தாய்மார்களுக்கு, குழந்தைகளுக்கு, முதியோர்களுக்கு என்று சொல்லி தேடி, தேடி, தேடி, தேடி ஒவ்வொன்றையும் செய்து கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் பெண்களுக்கு மிகப் பிடித்தமான முதலமைச்சராக இருக்கின்றார்.

பெண்களுக்கு மிகப் பிடித்தமான தலைவராக இருக்கிறார். அண்மையிலே, அண்ணன் அவர்கள் அரசு நிகழ்ச்சிக்காக ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தபோது, அன்றைக்கு பார்த்தால் கிட்டத்தட்ட 36 கிலோ மீட்டர் வரை வழிநெடுகிலும் பெண்கள் நின்று அவரை வரவேற்றார்கள். எனக்குத் தெரிந்த வரையில், சாதாரணமாக எந்தவொரு தலைவருக்கும் இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு, வரவேற்பு கிடைக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 36 கிலோ மீட்டர் வரை பெண்கள் இருந்தார்கள். அவர்களைப் பார்த்துவிட்டு, கிட்டத்தட்ட 3 கிலோ மீட்டருக்கு மேல் முதலமைச்சர் அவர்கள் நடந்திருப்பார்கள். உண்மையாகவே எங்களுக்கெல்லாம் நெகிழ்வாக இருக்கிறது. இப்படியெல்லாம் பெண்களுக்காகவே பார்த்து, பார்த்து, பார்த்து, பார்த்து அண்ணன் அவர்கள் இதைச் செய்து கொண்டிருப்பதனாலேதான் இன்றைக்கு இருக்கிற மூத்த குடிமக்கள்-மூத்த குடிமக்களெல்லாம். . .

இரண்டே நிமிடம். இப்படியெல்லாம் மூத்த குடிமக்கள் முதலமைச்சர் அவர்களை மகனாகப் பார்க்கிறார்கள். அவர் வயதை ஒத்தவர்களெல்லாம் அண்ணனாகப் பார்க்கிறார்கள், தம்பியாகப் பார்க்கிறார்கள். அவர் வயதில் குறைந்தவர்களாக உள்ள இல்லத்தரசிகள், பணிபுரியும் பெண்கள், கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகளெல்லாம் இன்று 'அப்பா'வாக அவரைப் பார்க்கி றார்கள். 'அப்பா' என அழைக்கிறார்கள். 'அன்புள்ள அப்பா, எங்கள் அப்பா நீங்கள்தான் அப்பா' என்று தமிழ்நாடே சொன்னபடி, தமிழ்நாடே கொண்டாடி மகிழ்கிறது. இதேபோல், இன்னும் ஒரே யொரு நிகழ்வு. இன்று காலையில் அவைக்கு வந்தபோது பள்ளியிலே படிக்கின்ற மாணவிகள் கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பார்வையாளர்கள் மாடத்திலேயிருந்து முதலமைச்சர் அவர்களைப் பார்ப்பதற்காக அமர்ந்திருந்தார்கள். ஆனால், இதையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாமல் கொச்சைப்படுத்திக்கொண்டு, வயிற்றெரிச்சலில் தன்னிலை மறந்து மயக்கத்திலே இருப்பவர்களும், Whatsapp செய்தியை முழுங்கிவிட்டு மைக் முன்னால் வாந்தி எடுப்பவர்களும், படித்த மாமேதை என தனக்குத்தானே தம்பட்டம் அடிக்கும் அறிவிலிகளும் இதை கொச்சைப்படுத்துகிறார்கள். இதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

இவ்வாறு வி.சி. சந்திரகுமார் பேசினார்.



திருப்புவனம் மேற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் கழக செயற்குழு கூட்டம் அவைத்தலைவர் இளங்கோவன் தலைமையில் ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கை மாறன், பேரூர் கழக செயலாளர் நாகூர் கனி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் உரையாற்றினார். த.சேங்கை மாறன் தீர்மானங்களை வாசித்தார். மாரியப்பன் கென்னடி, ரகமத்துல்லாகான், மூர்த்தி, ராமலிங்கம், ஈஸ்வரன், சுப்பையா மற்றும் கிளைக் கழக வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் நேற்று முன்தினம் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, மகளிர்களுக்கு பள்ளிவாசல் தெரு, காந்தி சிலை, கடைவீதி அருகே நலத்திட்ட உதவிகளை வழங்கி, திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். இந்த எம்.ஜெய்கணேஷ், ரேவதி ஜெய்கணேஷ், தம்பிதுரை உட்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.